(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 7 (1).] **பாராளுமன்றம்**

## 7 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2017 ஆகஸ்ட் 25 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2017 செப்தம்பர் 06, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

அரசியலமைப்புக்கான இருபதாவது (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்கள் சீன குடியரசுக்கும் இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 20 ஆம் திகதிய 2024/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் வியட்நாம் சோசலிசக் குடியரசுக்கும் இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2017 யூலை 19 ஆம் திகதிய 2028/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 09 ஆம் திகதிய 2022/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 19 ஆம் திகதிய 2024/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூலை 11 ஆம் திகதிய 2027/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 59 ஆம் 63 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் (ப) என்னும் பந்தியின் கீழ் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 14 ஆம் திகதிய 2023/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2014 ),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கமைய 2017.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, பட்டயக் கணக்காளர்களான கேபீஎம்ஜீ நிறுவனத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய சேமிப்பு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்ககள் (2014),— பணக்கொள்கைச் சட்டத்தின் 35 (3) ஆம் உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (3) ஆம் உட்பிரிவின் கீழ், 2016.05.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளரின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய சேமிப்பு வங்கியின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2014),— பணக்கொள்கைச் சட்டத்தின் 35 (3) உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (3) உட்பிரிவின் கீழ் 2016.09.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான மக்கள் வங்கியின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2014),— பணக்கொள்கைச் சட்டத்தின் 35 (3) உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (3) உட்பிரிவின் கீழ் 2017.05.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை வங்கியின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (3) உட்பிரிவின் கீழ் 2016.11.15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— பிரதேச அபிவிருத்தி வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2014),— பணக்கொள்கைச் சட்டத்தின் 35 (3) உட்பிரிவின் கீழ் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (3) உட்பிரிவின் கீழ் 2016.10.28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2017 நவம்பர் 13, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

134/ '15

கௌரவ புத்திக பத்திரண,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.01.01 ஆம் திகதியிலிருந்து 2015.06.30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், சட்ட விரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு கைப்பற்றப்பட்ட சிகரட்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி சிகரட்களுடன் கைது செய்யப்பட்டு தவறாளிகளான ஆட்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் வெளிநாட்டவரெனில் நாடு யாதென்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் ஒவ்வொரு ஆளுக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) கைப்பற்றப்படுகின்ற சட்ட விரோதமான சிகரட்கள் சட்ட நடவடிக்கைகளை தொடர்ந்து அழிக்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், சிகரட்கள் அழிக்கப்படும் செயல் நடைமுறை யாதென்பதையும்;

(iii) இன்றேல், மேற்படி சிகரட்கள் அரச வரிகளுக்குட்படுத்தப்பட்டு சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

931/ '16

கௌரவ சந்திம கமகே,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (6)

(அ) (i) இலங்கை மின்சார சபை, தனியார் துறையிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்கையில், பெறுகை நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென மின்சார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறித்து அறிவாரா;

(ii) இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மின்சார கொள்வனவுகளின்போது கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அச்சந்தர்ப்பங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

991/ ’16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர்கள் அல்லது இணைத் தலைவர்களாக பாராளுமன்ற உறுப்பினர் அல்லாதோர் நியமிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், அவர்கள் தலைவர் பதவியேற்றுள்ள பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி தலைவர்களுக்கான அதிகாரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஆட்கள் மேற்கூறிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(v) மேற்படி ஆட்களின் அதிகூடிய கல்வித் தகைமைகள் அல்லது தொழிற்தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி தலைவர்களுக்கு/ இணைத் தலைவர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் வேறு வசதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1113/ ’16

கௌரவ சமிந்த விஜேசிறி,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 தொடக்கம் 2016 ஆம் ஆண்டின் இற்றைவரை பதுளை மாவட்டத்தில்,

(i) வழங்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி உரிமப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி உரிமப் பத்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஆண்டுதோறும் கிடைத்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) எரிபொருள் நிரப்பு நிலைய உரிமப் பத்திரங்கள் வழங்கப்படும்போது கவனத்தில் கொள்ளப்படும் அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(v) இவ்வாறு எரிபொருள் நிரப்பு நிலைய உரிமப் பத்திரங்கள் வழங்கப்படுகின்ற போது ஏதேனும் மோசடிகள், ஊழல்கள் இடம்பெற்றிருக்குமாயின், அது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1191/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் புத்தளம் மாவட்டத்தில் இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போதைக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 1984 முதல் 2009 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2009 ஆம் ஆண்டில் யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில் மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1298/ ’16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் பணியாற்றும் கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கையானது ஒவ்வொரு பதவிக்கமைய தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) மாத்தறை மாவட்டத்தின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பதவியணியில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கையானது தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கமைய தனித்தனியாக யாது என்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(vi) ஆமெனின், அதற்கு ஏற்புடையதான ஆட்சேர்ப்பு நடைமுறை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1381/ ’16

கௌரவ பந்துல குணவர்தன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுதிட்டத்தின் 149 ஆம் இலக்க முன்மொழிவின் படி அநுராதபுரம், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கமத்தொழில், கால்நடை வளர்ப்பு, மீன் உற்பத்தி வலயங்களை நிறுவுவதற்கு ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) இந்த மூன்று கருத்திட்டங்களுக்குமான சாத்தியவள அறிக்கைகள் யாரால் தயாரிக்கப்பட்டதென்பதையும்;

(iii) இதன்படி, இந்த மூன்று கருத்திட்டங்களுக்காகவும் மதிப்பிடப்பட்ட மொத்த செலவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மூன்று கருத்திட்டங்களுக்காகவும் 2016 ஆம் ஆண்டு நிறைவடையும் போது திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு எவ்வளவென்பதையும்;

(v) 2017 ஆம் ஆண்டுக்காக மேற்படி கருத்திட்டத்தின் சார்பில் வழங்கப்படக்கூடிய நிதி ஏற்பாடு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1466/ ’16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்களில் வசிக்கின்ற குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியங்களிலிருந்து இலவசமாக கூரைத் தகடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) பன்முகப்படுத்தப்பட்ட நிதியங்களை பயன்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட கூரைத் தகடுகள் பகிர்ந்தளிக்கப்படுதல் தடைசெய்யப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை;

(iv) மேற்படி தடையை நீக்கி, முன்னர் இருந்ததைப்போல் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊடாக கூரைத் தகடுகளைப் பகிர்ந்தளிக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1478/ '16

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடமேல் மாகாணத்தில், மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பாடசாலைகளில் நிரந்தர அதிபர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) தற்போது பதில் கடமையாற்றும் அதிபர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) கடந்த வருடம் நடத்தப்பட்ட அதிபர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையில் வடமேல் மாகாணத்தில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களது பெயர்கள் யாவை;

(v) மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தற்போது சரியான விதத்தில் பணியிடங்களுக்கு அமர்த்தப்பட்டுள்ளார்களா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1584/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹொரணை, போருவதண்ட, வகவத்தை, பர்த் புதிய வீடமைப்புத் தொகுதியில் 39 ஆம் இலக்க முகவரியில் வதியும் திருமதி. பீ. சீத்தாதேவி ஹொரணை, பர்த் தோட்டத்தின் சிறுவர் பூங்கா நிருவாகியாக சேவையில் இணைந்த திகதி யாதென்பதையும்;

(ii) இவர் சேவையிலிருந்து விலகிய திகதி யாதென்பதையும்;

(iii) 26 வருடகால சேவையை முடிவுறுத்தும்போது இவருக்குக் கிடைக்க வேண்டிய நட்டஈட்டுத் தொகை மற்றும் பணிக்கொடைத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அத்தொகையைப் பெற்றுக்கொடுப்பதற்கு தொழில் திணைக்களத்தினால் 2016.11.26 ஆம் திகதி குறித்துரைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நட்டஈட்டுத் தொகை மற்றும் பணிக்கொடைத் தொகை செலுத்தப்படாதிருப்பது ஏனென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1601/ ' 17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் தேசிய வலுசக்திக் கொள்கை காலங்கடந்துவிட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) இலங்கையின் சமகால மற்றும் எதிர்கால எதிர்பார்ப்புகளுக்கு பொருத்தமான தேசிய வலுசக்தி கொள்கையொன்று தேவை என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி புதிய தேசிய வலுசக்தி கொள்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1603/ '17

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு நகருக்கு மின்சாரத்தை வழங்கும் நிலக்கீழ் மின்சார வழங்கல் முறையொன்று சுமார் 03 வருட காலமாக செயலிழந்துள்ளமை பற்றி அறிவாரா;

(ii) மேற்படி மின்சார வழங்கல் முறையின் மின்சார வழங்கல் கொள்ளளவு யாது;

(iii) குறிப்பிட்ட வழங்கல் முறையை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் தாமதம் அடைவதற்கான காரணம் யாது;

(iv) மேற்படி வழங்கல் முறையின் திருத்தியமைத்தல் தாமதமடைதல் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் யார்;

(v) மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் எதிராக அமைச்சு அல்லது இலங்கை மின்சார சபையினால் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுங்காற்று நடவடிக்கை வெவ்வேறாக யாது;

(vi) கொழும்பு நகரில் தொடர்ச்சியான மின்சார வழங்கலை உறுதிப்படுத்தும் முகமாக மின் அனுப்பல் முறைமையினை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1633/ '17

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைக்கு சொந்தமான வலுசக்தி உற்பத்தி மூலங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வலுசக்தி மூலத்திலிருந்தும் நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைக்கு கிடைக்கும் வருடாந்த வருமானம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது நிலைபெறுதகு சக்தி நிதியத்தின் வசமுள்ள நிதியத்தின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிதியம் வைப்புச் செய்யப்பட்டுள்ள வங்கி/நிதி நிறுவனம் யாதென்பதையும்;

(v) மேற்படி நிதியத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களுக்காக அது உரிய வகையில் பயன்படுத்தப்படுகின்றதென திருப்தியடைகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1711/ '17

கௌரவ செஹான் சேமசிங்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானரைக் கேட்பதற்கு ,— (2)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தில் இயங்கிவருகின்ற சிவில் பாதுகாப்பு வலயங்களின் எண்ணிக்கை யாது;

(ii) ஒவ்வொரு வலயத்துடனும் இணைக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட சிவில் பாதுகாப்பு வலயங்களில் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டனவென்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அது பற்றிய தகவல்கள் யாவை;

(iii) சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரொருவரால் இசை நிகழ்ச்சி டிக்கெட்டுகள் 20 விற்பனை செய்யப்படவேண்டிய கட்டாயம் நிலவியதென்பதை அறிவாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1792/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990.12.31 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த காலப்பகுதியில் வட மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் பணியாற்றிக்கொண்டிருந்த முஸ்லிம் விவாகப் பதிவாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி விவாகப் பதிவாளர் பிரிவுகளின் மூலம் உள்ளடக்கப்படுகின்ற கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி பதிவாளர் பிரிவுகள் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கங்கள் மற்றும் திகதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 நவம்பர் 14, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

136/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காடுகளிலிருந்து பிடித்து சட்டத்துக்கு முரணாக வைத்துக் கொண்டுள்ள மற்றும் 2009 ஆம் ஆண்டின் பின்னர் போலியான ஆவணங்களை தயாரித்து பதிவு செய்யப்பட்டுள்ள யானைக் குட்டிகள் தொடர்பில் விசாரணை செய்து, தயாரிக்கப்பட்ட கணக்காய்வு விசாரணை அறிக்கை 2014.07.22 ஆம் திகதி அப்போதைய வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சின் செயலாளரிடத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி அறிக்கை தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து 14 நாட்களுக்குள் அறிவிக்க வேண்டியிருந்தது என்பதையும்;

(iii) 14 நாட்கள் பூர்த்தியாவதற்கு முன்னர், மேற்படி அறிக்கையைத் தயாரித்த பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. ஏ.எச்.எம்.எல். அம்பன்வல அப்பணியிலிருந்து அகற்றப்பட்டார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அறிக்கையின் பிரகாரம் யானைக் குட்டிகளின் கடத்தல் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆட்களின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் பதவி ஆகிய தகவல்களை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி ஆட்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நடவடிக்கைகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அத் திகதி யாது என்பதையும்;

(v) குறித்த அறிக்கையை இச் சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

976/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) வடமேல் மாகாணத்தின் சிலாபம், இரணவில பிரதேசத்தில் "அமெரிக்காவின் குரல்" (Voice of America) என ஒலிபரப்பு நிலையமொன்று உள்ளதா;

(ii) ஆமெனில், அதற்காக வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது;

(iii) மேற்படி காணி வழங்கப்பட்டுள்ளது இறையிலி அடிப்படையிலா இன்றேல் குத்தகை அடிப்படையிலா;

(iv) குத்தகை அடிப்படையிலாயின், இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்தியுள்ள குத்தகைத் தொகை ஒவ்வொரு வருடத்திற்கிணங்க வெவ்வேறாக யாது;

(v) இந்த நிலப்பரப்பில் இலங்கை அரசாங்கத்தின் அனைத்துச் சட்டதிட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) "அமெரிக்காவின் குரல்" நிறுவனத்தை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் அல்லது "Voice of America" நிறுவனத்துடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகள் யாவை;

(ii) மேற்படி உடன்படிக்கைகள் அனைத்தையும் சபையில் சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்படி நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(iv) அந்நிறுவனத்தினால் ஆற்றப்படுகின்ற வேலைகள் மற்றும் ஒலிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகள் யாவை;

(v) மேற்படி வேலைகள் மற்றும் நிகழ்ச்சிகளை ஒழுங்குமுறையாக்குகின்ற இலங்கை அரச நிறுவனம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1046/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உள்ளூராட்சித் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் பற்றிய மேன்முறையீட்டு விசாரணைகள் முடிவடைந்துள்ள போதிலும் உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்திலுள்ள குறைபாடுகள் காரணமாக உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த முடியாதுள்ளதென தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அல்லது அதன் முன்னைய தேர்தல் திணைக்களத்தினால் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய குறைபாடுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி குறைபாடுகளில் தேர்தல்களை நடத்த முடியாத மட்டத்திலான குறைபாடுகள் இருப்பின், அவை யாவையென்பதையும்;

(iv) மேற்படி குறைபாடுளை தேர்தல்கள் ஆணைக்குழு அல்லது அதன் முன்னைய தேர்தல் திணைக்களம் எழுத்து மூலமாக அறிவித்துள்ள திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்ய இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1116/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை பண்டாரவெல நகர சபைக்கு;

(i) உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள நிதித் தொகை;

(ii) மாகாண சபையினால் வழங்கப்பட்டுள்ள நிதித் தொகை;

ஆண்டு ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை உள்ளூராட்சி அமைச்சினாலும் ஊவா மாகாண சபையினாலும் பதுளை மாவட்டத்தின் ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதித் தொகை ஆண்டு ரீதியாக தனித்தனியாக எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1171/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013ஆம் ஆண்டில் அம்பாறை மாவட்டத்தின், சம்மாந்துறையில் நடைபெற்ற "தயட்ட கிருள" கண்காட்சிக்கு வருகைதந்த விருந்தினர்களுக்கு பாதுகாப்பு நல்குவதற்காகவும் வாகனங்களை தரித்து வைப்பதற்காகவும் வலதாபிட்டிய பிரதேசவாசிகளின் வயற் காணிகளை பாதுகாப்புப் படையினர் தற்காலிகமாக சுவீகரித்துக்கொண்டார்கள் என்பதையும்;

(ii) மேற்படி காணிகளை பயன்படுத்தியமைக்காக எந்தவிதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) தற்போது வெறுமையாக உள்ள இக்காணிகளில் பயிர்செய்கையை மேற்கொள்வதற்கு காணி உரிமையாளர்கள் முயற்சித்தபோதிலும், இதற்கு இராணுவ உத்தியோகத்தர்கள் இடமளிப்பதில்லை என்பதையும்;

(iv) மேற்படி காணிகளை உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்காணிகளை மீண்டும் உரிமையாளர்களுக்கு பெற்றுக்கொடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1192/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் மன்னார் மாவட்டத்தில் இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போதைக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 1984 முதல் 2009 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2009 ஆம் ஆண்டில் யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில் மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1362/ ’16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— அபிவிருத்திப் பணிப்பொறுப்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை செலுத்துவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ள மாத்தறை மாவட்டத்திலுள்ள தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டுள்ள மாத்தறை மாவட்டத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் பதிவு செய்யப்படுவதற்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச தேவைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1383/ ’16

கௌரவ பந்துல குணவர்தன,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 147 இன்படி, மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் இறக்குமதிக்கான விசேட வியாபாரப் பண்டங்கள் வரி ரூபா 50/- வரை அதிகரிக்கப்பட்டதன் மூலம், அரச வருமானத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு யாது என்பதையும்;

(ii) 1977ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் அளவும் இறக்குமதிப் பெறுமதியும் ஒவ்வொரு ஆண்டு வாரியாக யாது என்பதையும்;

(iii) சுங்கத் தரவுகளின்படி, இலங்கைக்கு மீன் மற்றும் மீன் உற்பத்திகளை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களின் பெயர் பட்டியலைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) இலங்கைக்கான மீன் இறக்குமதியை குறைப்பதற்கு அரசாங்கத்திடம் ஏதேனும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1494/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்த) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டத்தின் 7(25) பிரிவுக்கு அமைய 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் அல்லது ஏதேனுமொரு மாகாண சபை நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்ற ஏதேனுமொரு கூட்டுறவுச் சங்கத்தின் இலாபம் மற்றும் வருமானம் 2011 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) அதற்கு மேலதிகமாக, மேற்படி கூட்டுறவுச் சங்கங்களின் வட்டி மற்றும் பங்கிலாபங்களும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) இதற்கு மேலதிகமாக, உண்ணாட்டரசிறை சட்டத்தின் 133(3)(அ) பிரிவுக்கு அமைய மேற்படி கூட்டுறவுச் சங்கங்களின் வட்டி வருமானம் தடுத்துவைத்தல் வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதை யும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விடயங்கள் காரணமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு பெரும் அனுகூலமானதொரு நிலைமை ஏற்பட்டது என்பதை ஏற்றுக் கொள்கின்றாரா என்பதையும்;

(ii) இவ்வாறான நிலையில், 2017 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மேற்படி வரி விலக்கு இரத்துச் செய்யப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இவ்வாறு இரத்துச் செய்யப்பட்டுள்ள சகல வசதிகளும் மீண்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1593/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடமேல் மாகாண சபையின் கீழ் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை வடமேல் மாகாண சபையின் மூலம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1602/ ’17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அன்டே லெகோ பிரைவட் லிமிடெட் (Ante Leco (pvt) Ltd.) நிறுவனம் தொடர்பில் அரசாங்கத்துக்கு உள்ள உரிமை யாது;

(ii) மேற்படி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் யாது;

(iii) மேற்படி நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள மின் மானிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி நிறுவனத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(v) ஆரம்பம் முதல் குறிப்பிட்ட நிறுவனம் அடைந்துள்ள இலாபம் அல்லது நட்டம் ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1604/ ’17

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மேல் மாகாணத்தில் நிறுவப்பட்டுள்ள, இலங்கை மின்சார சபைக்கு விநியோகிப்பதற்கென மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின்னுற்பத்தி நிலையங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மின்னுற்பத்தி நிலையத்தினதும் உற்பத்தி கொள்ளளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு மின்னுற்பத்தி நிலையத்திலிருந்தும் வெளியேற்றப்படும் சுற்றாடலை பாதிக்கும் வாயுக்கள் பற்றி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) சுற்றாடல் நேயம்மிக்க முறையியலை பயன்படுத்துவதன் மூலம் கொழும்பு நகரம் உள்ளிட்ட மேல் மாகாணத்திற்கு மின்சாரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1793/ ’17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990.12.31 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த காலப்பகுதியில் வட மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் பணியாற்றிக்கொண்டிருந்த முஸ்லிம் விவாகப் பதிவாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி விவாகப் பதிவாளர் பிரிவுகளின் மூலம் உள்ளடக்கப்படுகின்ற கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி பதிவாளர் பிரிவுகள் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கங்கள் மற்றும் திகதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1856/ '17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் மாநகர திட்டத்தின் (Megapolis Plan) கீழ் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோக்கியுள்ள 03 ஆண்டுகள் வரையில் கோட்டே பிரதேச செயலாளர் பிரிவிற்காக திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்கனவே ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

(iii) ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

(iv) இதற்கென அரச மற்றும் தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அம்முதலீடுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக கடன் தொகைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனின், கடன் பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள் மற்றும் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1954/ '17

கௌரவ கனக ஹேரத்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உத்தேசிக்கப்பட்ட இபோச மீள்கட்டமைப்பு மூலம் குறைக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் இபோச டிப்போக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த டிப்போக்களின் எண்ணிக்கை பிராந்திய மட்டத்தில் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) உத்தேசிக்கப்பட்ட மீள்கட்டமைப்பு முறை மூலம் தற்போது வெற்றிகரமான போக்குவரத்துச் சேவையை வழங்குகின்ற மற்றும் இடவசதிகளைக் கொண்டுள்ள சில டிப்போக்கள் மூடப்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், உத்தேசிக்கப்பட்ட முறையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அது தொடர்பாக மீள்பரிசீலிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 நவம்பர் 15, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

138/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கௌரவ பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கணக்காய்வு சேவைப் பிரமாணக் குறிப்பை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் அங்கத்தவர்கள் யார்;

(ii) மேற்படி குழு நியமிக்கப்பட்ட திகதி யாது;

(iii) மேற்படி குழு குறித்த சேவைப் பிரமாணக் குறிப்பை தயாரித்துமுடித்த திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை கணக்காய்வு சேவைப் பிரமாணக் குறிப்பை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது எத்திகதியில்;

(iii) இன்றேல், கணக்காய்வு சேவைப் பிரமாணக் குறிப்பை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) ஆமெனில், அது எத்திகதியில்;

(v) மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பை நிறைவேற்றுதல் தாமதமாவதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1072/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) நிதி அமைச்சினால், வரி செலுத்தல் தொடர்பாக 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்தில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களை பிரச்சாரம் செய்தல் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி அறிவித்தல்களின்,

(i) பிரச்சாரம் நிறுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) பிரச்சார நடவடிக்கைகளுக்கு ஒவ்வொரு ஊடக நிறுவனத்துக்கும் செலுத்தப்பட்ட தொகை வெவ்வேறாகவும் மொத்தமாகவும் எவ்வளவென்பதையும்;

(iii) வெளியிடுவதற்கு ஒதுக்கப்பட்ட நிதித் தொகையை ஊடக நிறுவனங் களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு பயன்படுத்திய அடிப்படை யாதென்பதையும்;

(iv) வெளியிடுவதற்கு தேவையான நிதியத்தை வழங்கிய அரச நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பங்களிப்பு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) வெளியிடுவதற்கு அமைச்சின் நிதி செலவிடப்பட்டிருப்பின், அதற்கென பயன்படுத்தப்பட்ட செலவினத் தலைப்புகள் யாவை என்பதையும்;

(vi) வெளியிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட விளம்பர முகவர் நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்துக்கும் வழங்கப்பட்ட தரகுப் பணத் தொகை மற்றும் கட்டணத் தொகை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vii) மேற்படி பிரச்சார முகவர் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1117/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் இயங்கும் திவிநெகும சமூக மைய வங்கிகளின் (சமுர்த்தி வங்கிகள்) எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வங்கிகள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) ஒவ்வொரு வங்கிக் கிளையிலிருந்தும் அனுகூலங்களை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வங்கியிலும் பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் இவர்களின் பெயர்கள், பதவிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) தற்போது மேற்படி வங்கிகளில் ஊழியர் வெற்றிடங்கள் உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி வெற்றிடங்களுக்கு ஊழியர்களை ஆட்சேர்க்கும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1197/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1983 ஆண்டளவில் யாழ்ப்பாண மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1411/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் 179 ஆம் இலக்க முன்மொழிவின் படி, இறக்குமதி செய்யப்பட்ட ஆபரணங்களுக்கு விதிக்கப்பட்ட 10% செஸ் வரியின் மூலம் திரட்டப்பட்ட மொத்த வரி வருமானம் எவ்வளவு;

(ii) குறிப்பட்ட செஸ் வரியை உள்நாட்டு கலைஞர்களை பேணுவதற்கு ஈடுபடுத்திய முறை யாது;

(iii) 1977 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஒவ்வொரு வருடத்திலும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஆபரணங்களின் பெறுமதி மற்றும் பிரதான இறக்குமதியாளர்கள் 20 பேர்களின் பெயர்ப்பட்டியலை சமர்ப்பிப்பாரா;

(iv) இலங்கைக்கு ஆபரணங்கள் இறக்குமதி செய்யப்படுமாயின், அவற்றின் பிரதான வழங்குனர்கள் யாவர்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1495/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யான்ஓயா கருத்திட்டத்திற்காக சுற்றயலில் வசித்த பிரதேசவாசிகளின் காணிகள் சுவீகரிக்கப்பட்டதன் காரணமாக பாரம்பரிய 07 குளங்கள் குடிமனைகள் மற்றும் வயல்கள் இந்த நீர்த்தேக்கத்தில் மூழ்கியுள்ளதால் இவர்கள் போக்கிடமின்றி நிர்க்கதியாகியுள்ளனர் என்பதையும்;

(ii) பிரதேசவாசிகளின் எதிர்ப்பினை பொருட்படுத்தாது கஜுவத்த பிரதேசத்தில் மனித வாழ்வுக்குப் பொருத்தமற்ற அடர்ந்த வனப் பிரதேசமொன்றை இவர்களுக்கு பகிர்ந்தளிக்க உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பிரதேசவாசிகள் மல்போருவ கிராமத்திற்கு அருகில், தெற்கு கால்வாயை அண்டியதாக நீர்த்தேக்கத்திற்கு மூழ்காத 600 ஏக்கர் காணியில் 200 ஏக்கர் காணியைப் பெற்றுத்தருமாறு கோரியிருந்தனர் என்பதையும்;

(ii) அதன்படி, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுடன் வருகை தந்து மேற்கூறிய காணியிலிருந்து 200 ஏக்கர் மேட்டுக் காணியை துரித கதியில் இந்த மக்களுக்கு வழங்குமாறு அவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) எனினும், இதுவரை இவர்களுக்கு குடியிருப்பதற்கான காணிகள் கிடைக்காததால், மேற்படி ஆ(ii) இன் முடிவின்படி உடனடியாக காணிகளை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1605/ '17

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கெரவலபிட்டி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கன எரிபொருள் எண்ணெய் (HFO) மூலம் தற்சமயம் இயங்கும் மின்னுற்பத்தி நிலையத்தை ஓராண்டுக்குள் நீர்ம இயற்கை வாயு (LNG) மூலம் இயங்க வைப்பதற்கு இணக்கப்பாடு காணப்பட்டதா என்பதையும்;

(ii) இவ்விணக்கப்பாடு முறிந்துள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி இணக்கப்பாடு முறிந்தமையால் இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மின்னுற்பத்தி நிலையத்தினால் இலங்கை மின்சார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்படும் மின்சார அலகொன்றின் விலையை தீர்மானிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுக்கு முரணாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதை அறிவாரா என்பதையும்;

(v) ஒப்பந்தத்தின் பிரகாரம் மின்சாரத்தை விநியோகிக்கும் நிறுவனம் செயற்படுவதை உறுதிபடுத்துவதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி இணக்கப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1781/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், ஏதேனும் காணிப் பிரதேசத்தை பாதுகாப்பு வனமாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்துவதற்கு பூர்த்தியாகவேண்டிய அடிப்படை தேவைகள் யாவையென்பதையும்;

(ii) வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இற்றைவரை பிரகடனப் படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) ஒவ்வொரு பாதுகாப்பு வனத்தையும் பிரகடனப்படுத்திய திகதி, அதற்கு உள்ளடக்கப்பட்ட காணியின் அளவு மற்றும் சம்பந்தப்பட்ட வரைபடம் உள்ளிட்ட அனைத்து விபரங்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1814/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) க.பொ.த (உயர் தர) உயிரியல் மற்றும் கணிதப் பாடத்துறைகள் கற்பிக்கப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பாடத் துறைகளில் ஒவ்வொரு பாடத்துக்கும் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை, இன்றளவில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) க.பொ.த (உயர் தர) விஞ்ஞான பாடத்துறைக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1842/ '17

கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைதீவு மாவட்டத்தில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஓட்டுத் தொழிற்சாலை செயற்படுவதில்லை என்பதை அறிவாரா;

(ii) இத்தொழிற்சாலைக்கு 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு எவ்வளவு;

(iii) மேற்படி பணத்தொகை யாரினூடாக செலவு செய்யப்பட்டது;

(iv) மேற்படி ஒதுக்கப்பட்ட பணத் தொகையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1857/ '17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் மாநகர திட்டத்தின் (Megapolis Plan) கீழ் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோக்கியுள்ள 03 ஆண்டுகள் வரையில் தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவிற்காக திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்கனவே ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

(iii) ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

(iv) இதற்கென அரச மற்றும் தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனின், அம்முதலீடுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக கடன் தொகைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனின், கடன் பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள் மற்றும் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1874/ '17

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தில் திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கு நிலைமை காரணமாக கிண்ணியா பிரதேசத்தில் குறிஞ்சாக்கேணி பாலம் அழிவடைந்ததென்பதையும்;

(ii) இற்றைவரை இப்பாலம் முழுமையாக மறுசீரமைக்கப்படாது, தற்காலிகமாக மறுசீரமைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான மக்கள் பயன்படுத்துகின்ற இப்பாலத்தை மறுசீரமைக்க அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது;

(ii) இற்றைவரை இப்பாலத்தை மறுசீரமைக்காதிருந்தமைக்கான காரணம் யாது;

(iii) இப்பாலத்தை இயலுமான விரைவில் மறுசீரமைக்க நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1876/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) உடப்பு பிரதேசத்தில் கரையோரம் பெரிதும் கடலரிப்புக்கு உட்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) அந்த கரையோரத்தை கடலரிப்பிலிருந்து பாதுகாக்க அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1960/ '17

கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2017 மே மாதம் 26 ஆம் திகதி முதல் யூன் மாதம் 05 ஆம் திகதி வரை ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக;

(i) உயிரிழந்த ஆளொருவருக்கு வழங்கப்படுகின்ற நட்டஈட்டுத்தொகை எவ்வளவு;

(ii) முழுமையாக மற்றும் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு வழங்கப்படுகின்ற நட்டஈட்டுத் தொகை தனித்தனியே எவ்வளவு;

(iii) வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியமை காரணமாக சகல சொத்துக்களையும் இழந்துள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற நட்டஈட்டுத் தொகை எவ்வளவு;

(iv) மேற்படி நட்டஈட்டுத் தொகையை வழங்க எடுக்கும் காலம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1964/ '17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது கோழிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சில பண்ணை உரிமையாளர்கள் "பற்றரி கேஜ்" எனும் பெயரில் புதியதொரு முறையில் கோழி வளர்ப்பில் ஈடுபடுகின்றனர் என்பதை அறிவாரா;

(ii) மேற்படி முறையின் மூலம் கோழிகள் கடும் சித்திரவதைக்கு உள்ளாகின்றன என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(iii) மேற்படி முறையை தடைசெய்ய நடவடிக்கை எடுப்பாரா;

(iv) மேற்படி முறையின் ஊடாக உள்நாட்டுச் சந்தைக்கு அதிகளவு முட்டை வழங்கப்படுவதால், முட்டை விலை குறைவடையும் இடர் தோன்றுமென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(v) ஆமெனில், உள்நாட்டு முட்டை உற்பத்தியாளர்களை பாதுகாப்பதற்கும் இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 196/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ ரவீந்திர சமரவீர

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ ஹரின் பர்னாந்து

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ எட்வட் குணசேகர

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— உமாஓயா பல்நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை செய்வதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

மலைநாட்டின் கிழக்குப் பள்ளத்தாக்கில் உள்ள உமா ஓயா மகாவலி கங்கையின் ஒரு பெரிய கிளையாறு என்பதனாலும்;

மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தைத் திட்டமிடும் கட்டத்தின் போது உமா ஓயாவின் நீர் வளங்களை பலநோக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துக்கு பயன்படுத்துவதற்கும் அதன் நீரை கிரிந்தி ஓயாவிற்கு திசைதிருப்புவதற்கும் முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனாலும்;

குறித்த முன்மொழிவுகள் 2007 ஆம் ஆண்டு நிறுத்திவைக்கப்பட்டுள்ளதனாலும் மற்றும் 2007 நவம்பர் 27 ஆந் திகதி உமா ஓயா பலநோக்கு அபிவிருத்தி கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்கானதொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கையின் முன்னாள் பெற்றோலிய மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினாலும் ஈரானின் எரிசக்தி அமைச்சரினாலும் கைசாத்திடப்பட்டுள்ளதனாலும்;

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை மற்றும் ஈரான் ஆகிய இரண்டு அரசாங்கங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரரான பராப் (Farab company) கம்பனிக்கு கிடைக்கக்கூடிய சாத்தியவள ஆய்வை இற்றைப்படுத்துவதற்கும் கருத்திட்டத்தின் பௌதீக ரீதியான நிர்மாணப்பணிகளை மேற்கொள்ளவும் அத்துடன் "நிதியளிப்பாளர்" என்ற வகையில் ஈரானிய ஏற்றுமதி அபிவிருத்தி வங்கியுடன் (EDBI) பொருத்தமான ஏற்பாடுகளை செய்துகொள்வதற்கும் ஈரானிய இஸ்லாமிய குடியரசின் (GIRI) அரசாங்கம் அதிகாரம் அளித்துள்ளதாலும்;

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், உமா ஓயா பலநோக்கு அபிவிருத்தி கருத்திட்டத்தின் அமுலாக்கத்துக்கானதொரு ஒப்பந்த உடன்படிக்கை 2008 ஏப்பிறல் 28 ஆந் திகதி இலங்கை நீர்ப்பாசன மற்றும் நீரகவள முகாமைத்துவ அமைச்சுக்கும் ஈரானின் பராப் எனர்ஜி என்ட் வோட்டர் புராஜக்ட்ஸ் என்ற கம்பனிக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ளதனாலும்;

ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் பின்வரும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன:

(அ) ஒப்பந்தத்தை நிறைவேற்றும்போது தரப்புக்களால் இணங்கப்பட்டவாறாக குறித்த நிபந்தனைகளை திருத்துதல்

(ஆ) ஒப்பந்தத்தை நிறைவேற்றும்போது தரப்புக்களால் இணங்கப்பட்டவாறாக தொழில்நுட்ப விதந்துரைப்புகள்/ தொழில்வழங்குனர் தேவைப்பாடுகளைத் திருத்துதல்

(இ) கருத்திட்டத்தின் முழு ஒப்பந்த விலை மற்றும் கொடுப்பனவு முறையியலைத் தீர்மானிப்பதற்காக அமைச்சரவை அமைச்சர்களுக்கு சிபாரிசுகளைச் செய்வதற்கும் மற்றும் விலை மற்றும் கொடுப்பனவு முறையியல் தொடர்பாக பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்காக ஒரு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுவொன்றைத் (Cabinet Appointed Negotiation Committee) தாபித்தல்.

2008.12.08 திகதியிடப்பட்ட அமைச்சரவை பத்திரத்தில் சிபாரிசு செய்யப்பட்ட பின்வரும் நடவடிக்கைகளுக்கு 2008 டிசம்பர் 18 அன்று அமைச்சரவை அமைச்சர்களின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாலும்;

(i) பேச்சுவார்த்தைக்குப் பின்னர் CANC இனால் சிபாரிசு செய்யப்பட்டவாறாக 514,059,198 ஐக்கிய அமெரிகக் டொலர் ஒப்பந்த விலையையும், கொடுப்பனவு முறையையும் ஏற்றுக்கொள்வதற்கும்;

(ii) ஒப்பந்தத்தின் மொத்தப் பெறுமானத்தை 529,059,198 ஐ.அமெ.டொலர்களாகச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டவாறு அமெரிக்க டொலர் 15,000,000 யினை ஒரு அவசர மாற்று ஏற்பாட்டுத் தொகையாக உள்ளடக்குவதற்கும்;

(iii) விபரமான சாத்தியவள ஆய்வைத் தொடர்ந்து வேலையின் வீச்சில் குறைப்பின் நிமித்தமாக ஏதாவது மீதி இருக்குமாயின் அந்த மீதிகள் அமைச்சரவைப் பத்திரத்தில் சிபாரிசு செய்யப்பட்ட பின்வரும் விடயங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமெனவும்;

  (அ) ஓட்டத்திசைமுக அபிவிருத்தி (நீர்ப்பாசன) வேலை;

  (ஆ) மேல் நீரேந்தல் பிரதேசத்தின் பாதுகாப்பு;

  (இ) கருத்திட்டத்தின் நிமித்தமாக இடம்பெயர்ந்த ஆட்களை மீள்குடியேற்றல்;

  (ஈ) சுற்றாடல் ஆய்வு;

  (உ) நகர அபிவிருத்தி

(iv) அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுவுக்கும் CANC மற்றும் 'பரப்' (Farab) கம்பனிக்கும் இடையில் செய்யப்பட்ட மேற்படி ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு 'பரப்' கம்பனி என்பவற்றுக்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கான அனுபந்தம் இல.1 இல் கைச்சாத்திடுவதற்கும்;

இதன் பிரகாரம் 2009 பெப்ரவரி 22 அப்போதைய நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் மற்றும் "பரப்" கம்பனியினால் ஒப்பந்தத்திற்கான அனுபந்தம் இல. 1 கைச்சாத்திடப்பட்டது.

2009 பெப்ரவரி 22 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் அனுபந்தம் இல.1 ஆனது ஏனையவற்றுடன் 15 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் பௌதீக அவசர மாற்று ஏற்பாட்டை உள்ளடக்கி கருத்திட்ட கிரயத்தை 529,059,198 ஐக்கிய அமெரிக்க டொலர்களாக மீளமைத்து ஒப்பந்த பெறுமானத்தை 514 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக்கியது.

வெவ்வேறு முகவர்கள் மற்றும் துறைகளைச் சேர்ந்த பணியாளர்களை உள்ளடக்கிய நிபுணர்கள் குழுவொன்றும் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினை மதிப்பீடு செய்துள்ளமையாலும்;

(அ) மொணறாகல மாவட்டத்தில் 4500 ஹெக்டெயர் புதிய காணிகளுக்கும் 1500 ஹெக்டெயர் ஏற்கனவேயுள்ள விவசாயக் காணிகளுக்கும் பாசனத்திற்காக நீர் வழங்கல்.

(ஆ) மொணறாகல மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 30 மெட்ரிக் கன மீட்டர் குடிநீர் மற்றும் கைத்தொழில் நீர்த்தேவைப்பாடுகளை வழங்கல்.

(இ) 120 மெகாவாற்றுக்கள் பொருத்தப்பட்ட கொள்ளளவைக் கொண்ட நிலக்கீழ் மின்வலு நிலையத்தின் மூலம் தேசிய மின்சாரத் தொகுதிக்கு வருடாந்தம் மணித்தியாலம் ஒன்றுக்கு 231 மெகா வாற்று மின் சக்தியினைப் பிறப்பித்தலும் வழங்கலும்.

(ஈ) டைரபா நீர்த்தேக்கத்திலிருந்து பண்டாரவளை நீர் விநியோகத் திட்டத்திற்கும் புகுல்பொல நீர்த்தேக்கத்திலிருந்து அட்டம்பிட்டிய நீர் விநியோகத் திட்டத்திற்கும் குடாஓயா நீர்த்தேக்கத்திலிருந்து ஹம்பகமுவ பிரதேசத்திற்கும் குடிநீர்த் தேவைகளுக்காக தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபைக்கு நீர் வழங்கல்.

இற்றைவரை உள்ளவாறாக பணியின் சுமார் 40 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாலும்;

இதன் பின்னர் 2014 திசம்பரில் பண்டாரவளை பிரதேச செயலகப் பிரிவுகளில் மகுல்எல்ல வெஹெரகலதென்ன, உடபெருவ, பம்பரகம மற்றும் ஹீல்ஓய பிரதேசங்களில் வீட்டுக் கிணறுகளில் நீர் மட்டம் குறைவடைதல், இயற்கை நீரூற்றுக்கள் வற்றிப்போதல் மற்றும் வீடுகளின் சுவர்களிலும் தரைகளிலும் மேலும் நிலங்களில் வெடிப்புகள் காணப்படுதல் பற்றி அறிக்கையிடப்பட்டுள்ளதாலும்;

பின்னர், 2017 ஏப்ரலில் எரனவில மற்றும் அத்தலப்பிட்டிய கிராம சேவையாளர் பிரிவிலும் பின்னர் தந்திரிய கிராம சேவையாளர் பிரிவிலும் இதே விளைவுகள் பற்றி அறிக்கையிடப்பட்டுள்ளதாலும்;

இந்த மாற்றங்களின் அடிப்படையில் நோக்குகையில், பின்வருவனவற்றைத் தீர்மானிப்பதற்காக இந்தக் கருத்திட்டத்தின் அமுல்படுத்தல் மற்றும் அதன் தாக்கத்தை மீள மதிப்பீடு செய்வது அவசியமாகியுள்ளதாலும்;

(அ) கருத்திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் உரிய, பூரண சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா

(ஆ) கருத்திட்டத்திற்காக உரிய, யதார்த்தபூர்வமான செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா

(இ) கருத்திட்டத்தினை அமுல்படுத்தும் போது யதார்த்தமற்ற செலவுமிகை ஏற்பட்டுள்ளதா

(ஈ) பூரணமான சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதா?

அத்துடன்,

(அ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கைகளைத் தயாரிப்பதற்குப் பொறுப்பாக இருந்த ஆட்களையும்;

(ஆ) கூறப்பட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படுவதில் இந்த ஆள் அல்லது ஆட்கள் கவனமின்றி இருந்துள்ளனரா என்பதையும்;

(இ) எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான ஒப்பந்தத்தை வழங்குவதில் ஏதேனும் மோசடி அல்லது குற்றச் செயல்களை மேற்கொண்டமையினால் குற்றவாளிகளாக்கப்பட்டனரா மற்றும் அவ்வாறாயின் அந்த ஆட்கள் யார் என்பதையும்;

(ஈ) கருத்திட்டத்தின் பாதகமான விளைவுகளுக்கு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் அல்லது நிறுவனங்கள் பொறுப்பாக்கப்பட வேண்டுமா என்பதையும் அவ்வாறாயின் அந்த ஆட்கள் யார் என்பதையும்;

(உ) இக்கருத்திட்டத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள ஆட்களுக்கு ஏதேனும் இழப்பீடு வழங்கப்பட வேண்டியுள்ளதா என்பதையும்;

நிர்ணயிப்பதற்கும்.

(ஊ) தமது விசாரணைகளுக்குப் பொருத்தமானதெனத் தெரிகுழு கருதும் வேறேதேனும் விடயத்தை ஆராய்வதற்கும் அறிக்கையிடுவதற்கும்;

பாராளுமன்ற தெரிகுழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

2. (அ) குழு மற்றும் அதன் தவிசாளர் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகளால் தடைபெறாது, உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபத்தொன்றை (21) விஞ்சுதலாகாது.

3. குழுவானது:

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை வரவழைப்பதற்கும் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளைக் கோருவதற்கு பாராளுமன்றத்தின் முன் அல்லது குறித்த குழுவின் முன் தோன்றி தனது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏதேனும் கடிதங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் அல்லது ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு எந்தவொரு ஆளுக்கும் பணிப்பு விடுப்பதற்கும்;

(இ) குழுவின் தலைவர் அல்லது உரிய நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் சாட்சிகாரர்களை வாய்மூலம் விசாரணை மேற்கொண்டு உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்கும் அல்லது வேறு விதத்தில் ஆராய்ந்து பார்ப்பதற்கும் சத்தியம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சியங்களை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் விசேட மற்றும் சிறப்பு நிபுணத்துவம் பெற்றவர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(உ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமாக.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு அல்லது மேலதிக காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை தயாரித்தல் வேண்டும்.